# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - இந்தியாவில் கல்வி வளர்ச்சி முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

32 x 1 = 32

1) வேதம் என்ற சொல் _______ லிருந்து வந்தது.

**(அ) சமஸ்கிருதம்** (ஆ) இலத்தீன் (இ) பிராகிருதம் (ஈ) பாலி

2) பின்வருவனவற்றுள் எது பண்டைய காலத்தில் கற்றலுக்கான முக்கிய மையமாக இருந்தது?

(அ) குருகுலம் (ஆ) விகாரங்கள் (இ) பள்ளிகள் **(ஈ) இவை அனைத்தும்**

3) இந்தியாவின் மிகப் பழமையான நாளந்தா பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்

(அ) உத்திரப்பிரதேசம் (ஆ) மகாராஷ்டிரம் **(இ) பீகார்** (ஈ) பஞ்சாப்

4) தட்சசீலத்தை யுனெஸ்கோ அமைப்பு உலக பாரம்பரிய தளமாக எப்போது அறிவித்தது?

(அ) 1970 (ஆ) 1975 **(இ) 1980** (ஈ) 1985

5) இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பிய நாடு எது?

(அ) இங்கிலாந்து (ஆ) டென்மார்க் (இ) பிரான்சு **(ஈ) போர்ச்சுக்கல்**

6) இந்தியாவில் கல்வி மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் மானியமாக 1 இலட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டினை செய்த பட்டய சட்டம் எது?

**(அ) 1813 ஆம் ஆண்டு பட்டய சட்டம்** (ஆ) 1833 ஆம் ஆண்டு பட்டய சட்டம் (இ) 1853 ஆம் ஆண்டு பட்டய சட்டம்
(ஈ) 1858 ஆம் ஆண்டுச் சட்டம்

7) பின்வரும் குழுக்களில் எந்தக் குழு பல்கலைக்கழக மானியக் குழுவினை அமைக்கப் பரிந்துரைத்தது?

(அ) சார்ஜண்ட் அறிக்கை, 1944 **(ஆ) இராதாகிருஷ்ணன் கல்விக்குழு, 1948** (இ) கோத்தாரி கல்விக்குழு, 1964
(ஈ) தேசியக் கல்விக் கொள்கை, 1968

8) இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

(அ) 1992 (ஆ) 2009 **(இ) 1986** (ஈ) 1968

9) சமணர்களின் சமய இலக்கியங்களில் இருந்த மொழிகள் __________

(அ) அர்த்த - மகதி
(ஆ) சமற்கிருதம்
(இ) பாரசீகமொழி
(ஈ) பாலி

(அ) அ, ஆ சரி (ஆ) அ, இ சரி **(இ) அ, ஈ சரி** (ஈ) ஆ, ஈ சரி

10) காந்திகிராம கிராமிய கல்லூரி நிறுவப்பட்ட ஆண்டு

**(அ) 1975** (ஆ) 1976 (இ) 1965 (ஈ) 1957

11) ஜெய்ப்பூரைச் சேர்ந்த _________ அறிவியல் பாடங்களின் கற்றலை ஊக்குவித்தார்.

(அ) ராஜா ராஜா (ஆ) வீரப்பநாயக்கர் **(இ) ராஜா ஜெய்சிங்** (ஈ) இவர்களில் யாரும் இல்லை

12) இரண்டாம் உலகப் போருக்குப்பின் கல்வி மேம்பாட்டிற்கான மிக முக்கியமான திட்டமான ________ தயாரிக்கப்பட்டது.

**(அ) சார்ஜண்ட் அறிக்கை** (ஆ) உட்ஸ் கல்வி அறிக்கை (இ) பட்டயச் சட்டம் 1813 (ஈ) வார்தா கல்வித்திட்டம்

13) ________ கல்வியின் தேவையை எடுத்துக் கூறியதுடன், எழுத்தறிவின்மையின் அபாயத்தையும் எச்சரித்தது.

(அ) நாலடியார் (ஆ) அகநானூறு (இ) எட்டுத்தொகை **(ஈ) திருக்குறள்**

14) __________ மன்னர்கள் சமஸ்கிருதத்தை ஆதரித்ததை அவர்களின் செப்புத் தகடுகளின் மூலம் அறியலாம்.

**(அ) பாண்டிய** (ஆ) சோழ (இ) பல்லவ (ஈ) சேர

15) மராத்திய ஆட்சியாளர் ________ பண்டைய ஆவணங்களை சேகரித்து அவற்றை தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் பாதுகாத்தார்.

(அ) சிவாஜி (ஆ) பாலாஜி விஸ்வநாத் **(இ) இரண்டாம் சரபோஜி** (ஈ) ஷாஜி போன்ஸ்லே

16) 1929 ஆம் ஆண்டு _________ பல்கலைக்கழகம் சிதம்பரத்தில் அமைக்கப்பட்டது.

(அ) அண்ணா **(ஆ) அண்ணாமலை** (இ) தட்சசீலம் (ஈ) நாளந்தா

17) வாரணாசியில் இருந்த குருகுலக் கல்விமுறைக்கான சான்றுகளை வழங்கியவர் யார்?

(அ) நிகிடின் (ஆ) யுவான் சுவாங் (இ) டொமிங்கோ பயஸ் **(ஈ) பெர்னியர்**

18) வங்காளத்தில் அரசர் தர்மபாலரால் நிறுவப்பட்டப் பல்கலைக்கழகம் எது?

(அ) தட்சசீல பல்கலைக்கழகம் **(ஆ) விக்ரமசீல பல்கலைக்கழகம்** (இ) பனாரஸ் பல்கலைக்கழகம்
(ஈ) நாளந்தா பல்கலைக்கழகம்

19) யாருடைய ஆட்சியின் போது சீனத்துறவி யுவான் சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்தார்?

**(அ) இரண்டாம் சந்திரகுப்தர்** (ஆ) மகேந்திர பல்லவன் (இ) முதலாம் நரசிம்ம பல்லவன்
(ஈ) ஹர்ஷ வர்த்தனர்

20) நாளந்தாவை உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ எந்த ஆண்டு அறிவித்தது?

(அ) 2006 (ஆ) 2007 (இ) 2008 **(ஈ) 2009**

21) கல்கத்தாவில் முதல் மதரசாவை நிறுவிய கவர்னர் ஜெனரல் யார்?

**(அ) வாரன் ஹேஸ்டிங்ஸ்** (ஆ) ராபர்ட் கிளைவ் (இ) வில்லியம் பெண்டிங் (ஈ) ரிப்பன்

22) காலங்காலமாக ஒரங்கட்டப்பட்டிருந்த சமூகப் பெண்களுக்கெனப் பள்ளி ஒன்றை நிறுவியர் யார்?

**(அ) ஜோதிபா புலே** (ஆ) ராஜா ராம்மோகன் ராய் (இ) கேசவ சந்திர சென் (ஈ) சர் சையது அகமது கான்

23) ஜெர்மானிய சமயப் பரப்பாளர் பார்த்தலோமஸ் சீகன்பால்கு, தமிழ்நாட்டில் எங்கு முதல் பள்ளியை நிறுவினார்?

**(அ) தரங்கம்பாடி** (ஆ) திருநெல்வேலி (இ) தஞ்சாவூர் (ஈ) திருச்சிராப்பள்ளி

24) ஆரம்பக்கல்வியை உள்ளூர் மற்றும் நகராட்சி அமைப்புகள் வழங்க வேண்டும் என்று நிர்ணயித்த ஆணையம்

(அ) கோத்தாரி ஆணையம் **(ஆ) ஹண்டர் ஆணையம்** (இ) இராதாகிருஷ்ணன் கல்விக் குழு
(ஈ) சார்ஜெண்ட் கல்விக் குழு

25) 10 + 2 + 3 கல்விமுறையை பரிந்துரைத்த ஆணையம்

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக்குழு (ஆ) டாக்டர் இலட்சுமணசாமி தலைமை குழு
**(இ) கோத்தாரி ஆணையம்** (ஈ) இவற்றில் ஏதுமில்லை

26) 1854ல் புதிய கல்விக் கொள்கைக்கான அறிக்கை யாரால் அனுப்பப்பட்டது?

(அ) மெக்காலே (ஆ) வில்லியம் பெண்டிங் (இ) ஆக்லாண்ட் **(ஈ) சார்லஸ் உட்**

27) விக்ரமசீலா பல்கலைக்கழகத்தை தொடங்கியவர்

**(அ) அரசர் தர்மபாலர்** (ஆ) முதலாம் நரசிம்மபல்லவன் (இ) அசோகர் (ஈ) யாருமில்லை

28) 1854ஆம் ஆண்டு சார்லஸ் உட் அறிக்கையின் கொள்கையை அமுல்படுத்தி பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்

(அ) கல்கத்தா, பீகார், பஞ்சாப் (ஆ) பீகார், பம்பாய் மற்றும் சென்னை **(இ) சென்னை, பம்பாய், கல்கத்தா**

(ஈ) பஞ்சாப், மகாராஷ்டிரா மற்றும் சென்னை

29) பல்கலைக்கழக மானியக் குழு அமைக்கப்பட்டபோது செயல்பாட்டில் இருந்த பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை

**(அ) 58** (ஆ) 60 (இ) 52 (ஈ) 59

30) 1951 இல் ஆண்களின் கல்வியறிவு விழுக்காடு

(அ) 18.3 **(ஆ) 27.2** (இ) 8.9 (ஈ) 27.3

31) 1844ஆம் ஆண்டு கிறிஸ்டியன் மிஷன் சொசைட்டி __________ ல் பள்ளியைத் தொடங்கியது.

(அ) திருச்சிராப்பள்ளி (ஆ) சென்னை **(இ) திருநெல்வேலி** (ஈ) தாம்பரம்

32) 6 - 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வியை அறிமுகப்படுத்திய குழு

(அ) ஹண்டர் ஆணையம் (ஆ) இராதாகிருஷ்ணன் கல்விக் குழு (இ) டி.பி. சட்டோபத்யாயா குழு

**(ஈ) சார்ஜென்ட் கல்விக்குழு**

**<u>கோடிட்ட இடத்தை நிரப்புக</u>** 18 x 1 = 18

33) வேதம் என்ற சொல்லின் பொருள் ______

**அறிவு**

34) தட்சசீல இடிபாடுகளை கண்டறிந்தவர் ______

**அலெக்சாண்டர் கன்னிங்காம்**

35) டில்லியில் மதரஸாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் ________ ஆவார்.

**இல்துத்மிஷ்**

36) புதிய கல்விக் கொள்கை திருத்தப்பட்ட ஆண்டு ______

**1992**

37) 2009ஆம் ஆண்டு இலவசக் கட்டாய கல்வி சட்டத்தின் விதிகளை அமல்படுத்துகின்ற முதன்மையான அமைப்பு ________ ஆகும்.

**அனைவருக்கும் கல்வி இயக்கம்**

38) பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு _______

**1956**

39) இரண்டு ஜெர்மன் பிஷப்புகளான _________ மற்றும் __________ ஆகியோர் திருவிதாங்கூரில் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி கல்லூரியை தொடங்கினார்.

**சீகன்பால்கு, புளூட்ச்சோ**

40) கல்கத்தாவின் முதல் பேராயரான _________ என்பவர் ஒரு மிஷினரி கல்லூரியை கல்கத்தாவில் தொடங்கினார்.

**டாக்டர் மிடில்டன்**

41) ஆங்கிலேயரின் செல்வாக்கு மிக்க கல்வியின் மூன்றாம் கட்டத்தை _________ காலம் என்றும் அழைக்கலாம்.

**அகில இந்திய கல்விக் கொள்கையின்**

42) பல்கலைக்கழக கல்வி குறித்த அறிக்கை தயாரிக்க 1948ஆம் ஆண்டு _________ கல்விக்குழு நியமிக்கப்பட்டது.

**Dr. இராதாகிருஷ்ணன்**

43) ________ என்ற சீனப்பயணியின் குறிப்புகள், காஞ்சியில் இருந்த புத்த மையம் பற்றி தெளிவாக படம் பிடித்துக் காட்டுகிறது.

**யுவான் - சுவாங்**

44) அந்தணர் மற்றும் அரச குலத்தோரின் மகள்கள், மகன்கள் மட்டுமே __________ இந்தியாவில் கல்வி கற்க முடிந்தது.

**பதில் :** பழங்கால

45) பேராசிரியர் கார்வே ________ வில் இந்து விதவைகளுக்காக ஒரு பள்ளியைத் தொடங்கினார்

**பதில் :** பூனா

46) அகில இந்திய மகளிர் மாநாடு தீர்மானம் இயற்றி ____________ கல்லூரியை டில்லியில் தொடங்கியது.

**பதில் :** இர்வின் சீமாட்டி

47) முதல் இடைநிலைக் கல்விக்குழுவின் தலைவர் ________ ஆவார்

**பதில் :** டாக்டர் இலட்சுமணசாமி முதலியார்

48) பதினான்காம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட மடம் __________.

**பதில் :** திருவாவடுதுறை சைவமடம்

49) ஜெர்மனியில் இருந்து அச்சு இயந்திரத்தை இறக்குமதி செய்தவர் ________.

**பதில் :** சீகன்பால்கு

50) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு ____________.

**பதில் :** 1929